# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 318/2019 |
| Preliminary register | |
| Sessions | |
| Deposition Of Witness for | Prosecution PW 6<br>Defense<br>Court |
| Name | திரு. இமானுவேல் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

*எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of March 2026.

நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை காவல்நிலையத்தில் உதவி ஆய்வளாராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு ஏர்வாடி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்போது கடந்த 04.06.2019 ஆம் தேதி 12.00 மணிக்கு முதல்நிலை காவலர் முத்தையா என்பவர் நிலையபொறுப்பில் இருக்கும் போது நான்குநேரி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு சிகிச்சை முடிந்து வெளியே வந்த அழகுசுந்தரம் மனைவி சிவகாமி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து அதன் தன்மைகேற்ப குற்ற எண். 99/2019 இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) மற்றும் 4 of TNPHW Act என்ற வழக்கை பதிவு செய்தார். அந்த புகார் மனு **அ.சா.ஆ.2** ஆகும். முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும்.

புகார் மனுவை அசல் தகவலறிக்கையுடன் இணைத்து கனம் நான்குநேரி நீதிமன்றம் அனுப்பியும் சம்மந்தப்பட்ட நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், எனது பார்வைக்கு வைத்த விசாரணை நகலை நான் எடுத்துகொண்டு 04.06.2019 ஆம் தேதி 15.00 மணிக்கு

சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் சாட்சிகள் காந்தி, லெட்சுமணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆகும்.

சாட்சிகள் சிவகாமி, பிரேமா, அனுசியா, சுப்பிரமணியன், இசக்கியம்மாள் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்தேன். வாதிக்கு காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவர் கார்த்திகா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மருத்துவர் வாதிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கியுள்ளார். அவர் அளித்த காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.6** ஆகும்.

04.06.2019 ஆம் தேதி 19.00 மணிக்கு எதிரியை தளபதிசமுத்திரம் பஸ்ஸ்டாப்பில் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் புலன் விசாரணையிலும் எதிரி குற்றபுரிந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) மற்றும் 4 of TNPHW Act–ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கின் எதிரிக்கும் புகார்தாரருக்கும் ஏற்கனவே முன்விரோதம் உள்ளது எனது விசாரணையில் துலங்குமா என்றால் இல்லை. வழக்கின் எதிரியின் செயலால் புகார்தாரருக்கு அவமானம் ஏற்பட்டதாகவோ, அவரது பெண்மைக்கு களங்கம் ஏற்பட்டதாகவோ, உயிருக்கு ஆபத்து ஏற்பட்டதாகவோ, புகார் வாக்குமூலத்திலோ, விசாரணையிலோ துலங்குமா என்றால் துலங்காது. சம்பவம் ஏற்பட்டதாக சொல்லப்படும் இடம் தனியாருக்கு சொந்தமான இடம் என்றால் இல்லை, வாதிக்கு சொந்தமான இடம். போலீஸ் விசாரணையில் அ.சா.1 மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளித்ததாக துலங்குமா என்றால் துலங்காது.

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும் எந்த தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் எழுதாத வெள்ளைதாளில் கையெழுத்து வாங்கிக்கொண்டு புகார் என்னால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்று

சொன்னால் சரியல்ல. சொன்ன நாள், இடம், விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கை சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.03.25 17:42:55 +0530